Your Friends
In Finance
★ SHABRA ★
Temporarily Shifted To:
Uthayan Office
292/2, Navalar Road,
Jaffna.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 3-50

நிதித்துறையில்
உங்கள் நண்பன்
★ ஷப்ரா ★
தற்காலிக முகவரி:
உதயன் பணிமனை
292/2, நாவலர் வீதி,
(கைலாச பிள்ளையார் கோவிலடி)
யாழ்ப்பாணம்.

கூடர் 5: பிரமோதூத ஸ்ரீ ஆனி மீ 17 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஃதா பிறை 07 (01-07-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 128

கிளிநொச்சி, முறிகண்டி, பரந்தனில் நேற்று பொம்மர்கள் குண்டுவீச்சு!

ஒருவர் பலி; தேவாலயம், உணவுக் களஞ்சியம் சேதம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

பரந்தன், கிளிநொச்சி, முறிகண்டி உட்பட பல பகுதிகளில் ஸ்ரீலங்கா விமானப்படை விமானங்கள் நேற்றுக் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணிவரை குண்டுகளைப் பொழிந்தன.

இந்தத் தாக்குதல்களின் போது ஸ்ரீலங்கா விமானப் படையினர் நேபாம் குண்டுகளை வீசியதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

நேற்றுக் காலை 8 மணியளவில் கிளிநொச்சி தர்மபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சில் பெந்தகோஸ்து தேவாலயம் ஒன்றும் கராஜ் ஒன்றும் பெரும் சேதத்திற்கு உள்ளாகின.

அப்பகுதியில் கடை வைத்திருந்த சுந்தர்ராஜன் என்பவர் மரணமானார்.

அப்பகுதியில் இருந்த கால் நடைகளும் பெரும் எண்ணிக்கையில் உயிரிழந்தன.

இதே வேளை—

கிளிநொச்சி திருநகர், கனகபுரம் ஆகிய இடங்களில் இடம் பெற்ற விமானக்குண்டுவீச்சில் இரண்டுவீடுகள் சேதமுற்றன.

நண்பகல் 11 மணியளவில் பரந்தன் பகுதியில் வீசப்பட்ட குண்டுகளினால் பரந்தன் அரச உணவுக் களஞ்சியத்தின் ஐந்து கட்டடங்கள் முற்றாகச் சேதமுற்றன. பொதுமக்களுள் ஒருவர் படுகாயமுற்றார்.

முறிகண்டிப் பகுதியில் உள்ள அடர்ந்த காட்டுப் பகுதிகளிலும் குண்டுகள் அதிக எண்ணிக்கையில் வீசப்பட்டன. இதனால் நூற்றுக்கணக்கான மரங்கள் எரிந்து போயின. (உ-9)

திருமலையில் கண்ணிவெடி! 8 சிப்பாய்கள் கால் இழப்பு!!

கொழும்பு, ஜூலை 1

விடுதலைப் புலிகளின் கண்ணி வெடி ஒன்றில் சிக்கி குறைத்தது எட்டுச் சிப்பாய்கள் தங்கள் கால்களை இழந்து விட்டனர்.

– கொழும்பில் இராணுவ அதிகாரிகள் இதனைத் தெரிவித்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

திருகோணமலைக்கு அருகில் இத்தக் கண்ணி வெடிச் சம்பவம் நிகழ்ந்ததாகவும் கூறப்பட்டது. (உ-எ)

பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள்

காங்கேசன்துறை, ஜூலை 1

பலாலியில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் கட்டுவன், வறுத்தலைவிளான் பகுதிகளில் விழுந்து வெடித்தன.

இதனால் பல வீடுகள் சேதமடைந்தன.

காங்கேசன்துறை, பலாலி பகுதி கடற்பகுதியில் இருந்து ஒரு மணிக்கு 3 நாக்கி பீரங்கி வேட்டுகளும் தீர்க்கப்பட்டன. [இ-68]

திருமலை அகதிகள் பெருமளவு முல்லைத்தீவு வருகிறார்கள்

புதிதாக 4 முகாம்கள் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

திருகோணமலையில் இருந்து அகதிகள் வருகை அதிகரித்துள்ளதை அடுத்து முல்லைத்தீவில் மேலும் நான்கு முகாம்கள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

வெள்ளிக்கிழமை மட்டும் இரண்டாயிரம் அகதிகள் முல்லைத்தீவுக்கு வந்துள்ளனர்.

அவர்களைப் பராமரிப்பதற்கு தற்சமயம் உள்ள 14 முகாம்கள் போதாத காரணத்தால் வற்றாப்பளை அம்மன் கோவில், தண்ணீரூற்று, வளையன்மடு, முள்ளியவளை ஆகிய இடங்களில் புதிய முகாம்கள் திறக்கப்பட்டுள்ளன.

அகதிகளுக்குத் தேவையான உணவு வசதிகளை அரசு சார்பற்ற நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. யாழ். செஞ்சிலுவைச் சங்கம் (3 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். மாவட்டத்தில் மட்டும் 175 ஆயிரம் அகதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ். மாவட்டத்தில் 1லட்சத்து 75 ஆயிரத்து 200 பேர் அகதிகளாக உள்ளனர் என்று நேற்றைய கணக்கெடுப்புத் தெரிவிக்கிறது. மொத்தம் 310 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அரசாங்க செயலகத்தால் இனமும் அகதிகள் கணக்கீடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதே சமயம் வெளி இடம்களில் இருந்து இங்கு இடம் பெயர்ந்தவர்கள் எண்ணிக்கை 5 ஆயிரம் குடும்பங்களாக உயர்ந்துள்ளது.

மண்டைதீவில் அடிக்கடி ஹெலியிலிருந்து தாக்குதல்

மக்கள் பெருமளவு இடம் பெயர்வு

மண்டைதீவு ஜூன் 1

மண்டைதீவு கிராமத்தில் கடந்த சில நாட்களாகவெறிலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படுகிறது. பொம்மர் விமானங்களும் இடைக்கிடையே வட்டமிட்டுக்கொண்டு இருக்கின்றன.

இப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்து அயல் கிராமங்களான அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளிலும்மற்றும் பொது ஸ்தாபனங்களிலும் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளார்கள். (இ-88)

ஷெல்லினால் போராளி மரணம்

யாழ்ப்பாணம். ஜூலை 1

பலாலி முகாமிலிருந்து மயிலிட்டிப் பக்கமாக ஏவப்பட்ட ஷெல் குண்டுக்கு இலக்காகி விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தம்பி (துரைசாமி) என்ற போராளி வீரமரணமடைந்தார். [உ-9)

விமானத் தாக்குதலை நிறுத்த தமிழ் அமைப்புகள் கோரிக்கை

புதுடில்லி, ஜூலை 1

வடக்கு- கிழக்கில் விமானத் தாக்குதல்களையும். மக்கள் மீதான இராணுவத் தாக்குதல்களையும் நிறுத்துமாறு தமிழர் அமைப்புக்கள், பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவைச் சந்தித்துக் கேட்டுக் கொண்டதாக இந்தியபொதுசனத் தொடர்பு சாதனங்கள் தெரிவித்தன.

ஈ.பி.ஆர்.எல்.எப்,ரெலோ, புளொட் ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகளின் தூதுக் குழுவே நேற்று பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவைச் சந்தித்துப் பேசினர்.

வடக்கு-கிழக்கில் அப்பாவி மக்கள் விமானத் தாக்குதல் மற்றும் இராணுவ நடவடிக்கைகளுக்குள்ளாகி உயிரிழக்கின்றனர்; அவர்கள் உடமைகள் சேதமாக்கப்பட்டுள்ளன, இதனைநாம்அனுமதிக்க முடியாது. இம்மாதிரிச்செயல்களுக்கு இலங்கை அரசு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

இப்படி இந்த அமைப்புக்களின் பிரதிநிதிகள் துணை அமைச்சரைக் கேட்டுக்கொண்டனர்- என்று இந்திய தொடர்புசாதனங்கள் வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-)

அகதிகள் படகு மீது தாக்கு; ஐவர் கொல்லப்பட்டனர்!

யாழ்ப்பாணம், ஜூலை1

திருகோணமலையில் இருந்து முல்லைத்தீவு நோக்கி வந்த அகதிகள் படகுகளின் மீது கொக்கிளாய் இராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் ஐவர் கொல்லப்பட்டனர், 10 பேர் காயமடைந்தனர்.

வியாழக்கிழமை இரவு இந்தச்சம்பவம் இடம்பெற்றது.

இறந்தவர்களின் சடலங்கள் செம்மலையில் அடக்கம் செய்யப்பட்டன.

காயமடைந்தவர்களுக்கு அளம்பில் வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

(இ-3)

இந்தியப் பிரதமருக்கு பிரேமா விசேட செய்தி!

வெளியுறவுச் செயலாளர் திலகரட்ன நாளை புதுடில்லியில் கையளிப்பார்

கொழும்பு, ஜூலை. 1

இந்தியப் பிரதமர் வி. பி. சிங்கிற்கு ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா விசேட செய்தி ஒன்றை அனுப்பி வைக்கிறார்.

இந்தச் செய்தியை ஸ்ரீலங்கா அரசின் விசேட தூதராக நாளை புதுடில்லி விரையும் வெளியுறவுச் செயலர் பேர்னாட் திலகரட்னா இந்திய அரசுப் பிரதிநிதிகளிடம் கையளிப்பார்.

வடக்கு, கிழக்கு நிலைமை தொடர்பாக ஸ்ரீலங்கா அரசின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் விதத்தில் ஜனாதிபதி பிரேமதாஸாவின் செய்தி அமைந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

இதேவேளை—

புதுடில்லியில் தங்கியிருக்கும் போது இலங்கை வெளியுறவுச் செயலர் பேர்னாட் திலகரட்னா, இந்திய வெளியுறவுச் செயலர் முகுந்த்பேக்கு வடக்கு, கிழக்கு மாகாண நிலைமையை எடுத்துரைப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அவர் இந்திய வெளியுறவு அமைச்சர் இந்தர்குமார் குஜ்ராலையும் சந்தித்துப் பேசுவார் என்று அறிவிக்கப்பட்டது. (உ-எ-9)

கிராமசேவகர்கள் குத்திக் கொலை!

யாழ்ப்பாணம், ஜூலை 1

கடந்த 22 ஆம் திகதி பெரிய நீலாவணை, கல்முனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இரு கிராம சேவையாளர்கள் ஸ்ரீலங்கா அதிரடிப்படையினரால் குத்திக் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தியாகராஜா, (பெரியநீலாவணை) குணசேகரம் (கல்முனை) ஆகியோரே கொலை செய்யப்பட்டவர்களாவர். (உ)

விடுதலைப் புலிகள் மீதான யுத்தம் முழுத் தமிழர்கள் மீதான யுத்தமே!

ஈரோஸ் பாலகுமாரன் ஜனாதிபதிக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தொடுக்கப்பட்டுள்ள யுத்தம் என்பது முழுத் தமிழ்ப் பேசும் மக்கள் மீதும் தொடுக்கப்பட்ட யுத்தமாகும்.

கடந்த செவ்வையன்று ஈரோஸின் வெகுஜன அணியான ஈழவர் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. வேலுப்பிள்ளை பாலகுமாரன் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

நேற்று அவர் விடுத்த அறிக்கை ஒன்றில் இந்தக் கடிதம் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:—

ஜூன் 16 ஆம் திகதி விடுதலைப்புலிகளுக்கும், ஸ்ரீலங்கா அரசுக்கும் ஏற்பட்ட போர் (3 ஆம் பக்கம் பார்க்க)

ஈரோஸ் உறுப்பினர்கள் மீது சென்னை சிறையில் தாக்கு

சென்னை, ஜூலை 1

தமிழகப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு சென்னை மத்திய சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஈரோஸ் உறுப்பினர்கள் மூவர் சிறையில் வைத்து பலமாகத் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அந்த மூவருடன் சிறையில் இருந்த மற்றைய சில தமிழ் அமைப்புக்களைச் சேர்ந்த உறுப்பினர்களினாலேயே இவர்கள் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

மட்டுநகரில் மக்கள் பலர் ஊரடங்கு; தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

மட்டக்களப்புப் பகுதியில் நேற்று முன்தினம் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு நேற்று வரை தொடர்ந்து அமுலில் இருந்தது.

ஊரடங்கு வேளையில் அப்பகுதியைச் சுற்றிவளைத்த ஸ்ரீலங்கா படையினர் நூற்றுக் கணக்கில் பொதுமக்களைக் கைது செய்து தடுத்து வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

தடுத்து வைக்கப்பட்டிருப்போரில் பெண்கள், முதியோர், குழந்தைகள் ஆகியோரும் அடங்குவர் என அறியவந்தது. [உ-9]

எல்லைப் புறங்களில் பாதுகாப்பை பலப்படுத்த ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு ஜூலை 1

வடக்கு-கிழக்கு மாகாண எல்லைப்புறக் கிராமங்களில் உச்சக்கட்டப் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி திரு.பிரேமதாச, படை உயர் அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

அனுராதபுரத்தில் நடந்த பாதுகாப்புச் சம்பந்தமான உயர்மட்ட மாநாட்டுக்குத் தலைமை வகித்தபோது அவர் இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

ஜனாதிபதி அங்கு வைத்து விடுத்த ஏனைய உத்தரவுகள் வருமாறு :-

★ வழிபாட்டுத் தலங்கள், அரசாங்க கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள் ஆகிய இடங்களின் பாதுகாப்புக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

★ கேந்திர நிலையங்களில் ஆயுதப் படைகளின் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்த வேண்டும்.

★ எல்லைக் கிராமங்களிலும் பாதுகாப்பைப்பலப்படுத்தப்பட வேண்டும். அதற்குக் கிராம மக்கள் அனைவரதும் ஒத்துழைப்புப் பெறப்பட வேண்டும். கிராமங்களுக்கு வரும் புதியவர்கள் குறித்து எல்லைக் கிராம மக்கள் பொலீஸாருக்குத் தகவல் கொடுக்க வேண்டும்.

வடமத்திய மாகாண பிர

(3 ஆம் பக்கம் பார்க்க)

அகதிகளாக வந்த 20 பேர் கொக்கிளாயில் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 1

அகதிகளாக படகில் வந்த 20 ஆண்கள் கொக்கிளாயில் வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானோரின் மனைவிமாரும், உறவினர்களும் செம்மலை இறங்குதுறையில் அவர்கள் வருகையை எதிர்பார்த்து சோகத்துடன் காத்திருக்கிறார்கள்.

கடந்த செவ்வாய், புதன், வியாழக்கிழமைகளில் திருமலையில் இருந்து அகதிகளாகப்படகுகளில் வந்தவர்களை கரைக்கு வருமாறு கொக்கிளாய்இராணுவத்தினர் பணித்தனர்.

கரைக்கு வந்த படகுகளில் இருந்தே சுமார் 20 ஆண்கள் இறக்கப்பட்டு படையினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். (உ-3)

சுப நேரம்

01- 7- 90

ஞாயிற்றுக்கிழமை ஆனி 17

சுபதேரம்:

08-56—10-26

இராகுகாலம்

04-26—05-56

முல்லைத்தீவில் பாடசாலை சேதம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

முல்லைத்தீவுநகரப்பகுதியில் வெள்ளிக்கிழமை நண்பகல் இடம் பெற்ற ஹெலித் தாக்குதலில் முல்லைத் தீவு திருக்குடும்பக்கன்னியர் மடப் பாடசாலை சேதமடைந்தது.

திடீரென ஹெலிதாக்கிய தில் இருவர் படுகாயமடைந்தனர். இவர்கள் புதுக்குடியிருப்பு அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-3)

வங்கி இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 01

ஹட்டன் நாஷனல் வங்கியின் யாழ்ப்பாண அலுவலகம் இடமாற்றம் செய்யப்பட உள்ளது. ஸ்டான்லி வீதியில் உள்ள அரஸ்கோ கட்டடத்துக்கு வங்கி மாற்றப்பட இருப்பதாக அதன் முகாமையாளர் தெரிவித்தார்

(3 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி

அகதிகளும் தங்களைத் தாக்க வந்தவை எண்டு சொல்லுவினமாக்கும்.....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சின்னஞ்சிறு விளம்பரம்)

விற்பனை

புத்தம் புதிய Remington Type - Writer, L33 Ceiling Fan, சிறிய அலுமாரி, கட்டில், மெத்தை, Floor Polisher, பெரிய அளவிலான பிறேம்போட்ட உலகப்படம் ஆகியன விற்பனைக்குண்டு. 37, மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (13537)

இறைச்சி கோழி விற்பனைக்கு

எல்லா வகையான இறைச்சி கோழிகளையும் குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre, C/o Nallur Video Centre. 19, முருகேசர் ஒழுங்கை. நல்லூர் [13550]

தேவை

தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் தெரிந்த பெண் பிள்ளை உடன் தேவை. மானிப்பாய் சங்கானையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வரவும். Fudo Enterprises, Jaffna Road, Manipay. (Shiva Studio , Bitsman. Bank அருகாமையில்.) [சி-4776]

மணமகள் தேவை

பிரித்தானியாவில் 14 வருடங்களாக பொறுப்பான பதவிவகிப்பவரும், பிரித்தானியாவில் சொந்த வீடும், வாகனமும் உடையவரும், விரைவில் இலங்கை வர இருப்பவருமான 39 வயதான குரு குல சுத்தோலிக்க 5', 4'' உயரமுடைய சகோதரனுக்கு படித்த பண்புள்ள ஆங்கிலம் பேசத் தெரிந்த மணமகள் தேவை. முழுவிபரத்துடன் விண்ணப்பிக்கவும்: C/o, No. 142, உதயன். (13462)

தவறிவிட்டன

திருநகர் சந்தைக்கும் முத்திரைச் சந்திக்குமிடையில் இரண்டு கோர்வைத் திறப்புக்கள் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் S. யேம்ஸ் ஆசிரியர் ஜமுனாரி நல்லூரில் ஒப்படைத்தால் ரூ. 200/- வீதம் சன்மானம் வழங்கப்படும். (13524)

இடமாற்றம்

சிறில்ஸ் பார்மஸி லிமிட்டெட் வை. மாணிக்கவாசகர் பெருமாக்கடவை அளவெட்டிக்கு மாற்றப்பட்டுள்ளது. ஊழியர்கள் யாவரும் சமூகமளிக்கவும் வாடிக்கையாளர்கள் மேற்படி முகவரியில் தொடர்பு கொள்ளவும் [13487]

அறிவித்தல்

ஜூபிலி பஜாரில் அமைந்திருந்த டவர் வோச் வேக்ஸ் ஸ்தாபனத்தினரிடம் திருத்துவதற்கு கொடுத்த பொருட்களை சீக்கிரத்தில் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம். தவறின் பொருட்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதனை அறியத் தருகின்றோம் தொடர்பு கோபாலகிருஷ்ணன் 234/4, மானிப்பாய் வீதி, சென். செபஸ்தியார் ஒழுங்கை, (ஓட்டுமடம் சந்திக்கு அருகாமை) யாழ்ப்பாணம் [13545]

TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ் – ஆங்கிலம் ரைப்பிங் செய்யவும் நாடுங்கள்: Fudo Jaffna Road, Manipay. (Bitsman, Bank அருகாமையில்.) (சி-4777)

Pups For Sale

Pure bred dobermann pincher female Pups for sale. Chocale brown colour Nallur Farm Centre, C/O Nallur Video Centre, 19, Murugesar Lane, Nallur Jaffna. (13551)

முகமூடி முன் நிறுத்தப்பட்டு மட்டுநகரில் 60 பேர் கைது

மட்டக்களப்பு நகரில் வெள்ளியன்று ஆயுதப்படையினர் நடத்திய தேடுதலில் 60 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

படையினரால் பொது இடங்களுக்கு வரவழைக்கப்பட்ட 12-50வயதுக்கு இடைப்பட்ட ஆண்கள் முகமூடிகளின் முன் நிறுத்தப்பட்டனர்.

முகமூடிகளின் தலையாட்டு தலைத் தொடர்ந்தே இந்த60 பேரும் கைதாகினர். என்று தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு நகரில் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் விதிக்கப்பட்ட பின்னரே மக்கள் பொது இடங்களுக்கு அழைக்கப்பட்டு முகமூடி முன் நிறுத்தப்பட்டனர். (இ-எ)

பெரிய வெங்காயம்

மேலும் 2ஆயிரம் மெட்ரிக் தொன் பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்ய கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் நடவடிக்கை எடுத்து உள்ளது. (இ-எ)

உடன் தேவை

அச்சு எழுத்துக்களை போட்டு வைக்கும் கொம்போவிங் கேஸ்கள் (Composing Cases) உடனடியாகத் தேவை.

நேரில் தொடர்பு கொள்ளவும்:

உதயன்

(கைலாசபிள்ளையார் கோவில் அருகாமையில்)

292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

மருந்துக்கடை இடமாற்றம்

இப்போதய சூழ்நிலையில் பாதுகாப்புக் கருதி எமது ஸ்தாபனம் கீழ்காணும் முகவரிக்கு மாற்றி உள்ளோம்.

★ ஆயுள்வேத மருந்துகள்
★ மருந்துச் சரக்குகள்
★ கோவில் அபிஷேகச் சாமான்கள்

விற்பனையாளர்

க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

4, பலாலி வீதி, 2 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(ஆரியகுளம் சந்திக்கு அண்மையில்)

(C/4768)

ஷப்றா

எமது ஸ்தாபனம், நாவலர் வீதி, 292/2ஆம் இலக்கத்தில் [நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில்] உள்ள உதயன் பணிமனைக்குத் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வழமையான அலுவலகப் பணிகள் காலை 9 மணி முதல் மாலை 3.30 மணி வரை நடை பெறுகின்றன என்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகிறோம்.

நிர்வாகத்தினர்,

ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்

[சி-4775]

யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம்

அறிவித்தல்

1. கால்நடை உணவு:

சங்கத்தின் கையிருப்பிலிருந்த சில மூலப்பொருட்கள் முடிவடைந்து விட்டதன் காரணமாக அவற்றை உள்ளூரில் கூடிய விலை கொடுத்து கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் வாகனக்கூலி மிகவும் அதிகரித்துள்ளது. இவற்றின் காரணமாக கால்நடையுணவின் விலையை 30-06-90 ஆம் திகதி தொடக்கம் கணிசமான அளவு அதிகரித்துள்ளோம் என்பதை கால்நடைவளர்ப்போருக்கு அறியத்தருகின்றோம்.

எமது சேவை தொடர்ந்தும் தங்களுக்கு வழங்கப்படும்.

2. பால் விநியோகம்:

தற்சமயம் நாட்டில் நடைபெற்றுவரும் சீரற்ற நிலையினால் பால் விநியோகத்தை சீராக நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பால் வழங்குனர்களிடமிருந்து உற்பத்திசெய்யும் பாலை கொள்வனவு செய்யமுடியாமலும் உள்ளது. பொதுமக்கள் எம்மிடம் கூடுதலான பாலை வழங்கும் இடத்து சங்கப் கூடுதலான பாலை பால் வழங்குனரிடமிருந்து கூடுதலாக கொள்வனவு செய்யக் கூடியதாக இருக்கும். எனவே எமது பாவனையாளர்கள் தங்களுக்கு தேவையான பாலை பின்வரும் நிலையங்களில் கொள்வனவு செய்து பால் வழங்குனருக்கு உதவி புரியுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1. நல்லூர் கிளை
2. பெருமாள் கோயில் கிளை
3. இணுவில் கிளை
4. மத்திய பால் சேகரிப்பு நிலையம், திருநெல்வேலி.

கடன் அடிப்படையில் பாலை கொள்வனவுசெய்ய விரும்பும் பாவனையாளர்கள் சங்கத்தில் வைப்புப் பணத்தை செலுத்தி தொடர்ந்துகொள்வனவு செய்யலாம்.

பொதுமுகாமையாளர்.

திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.
30 – 06 – 1990
(C/4770)

ஹட்டன் நஷனல் வங்கி

இடமாற்றம்

எதிர்வரும் திங்கட்கிழமை (02-07-90) முதல் எமது வங்கி 54, ஸ்ராண்லி வீதிக்கு(அரஸ்கோ கட்டடம்)இடமாற்றப்படவுள்ளது. என்பதனை சகல வாடிக்கையாளருக்கும் அறியத்தருகின்றோம். சேவை நேரம் பற்றி பின்னர் அறிவிக்கப்படும். சகல வங்கி ஊழியர்களும் 02-07-90 அன்று சமுகம் அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

முகாமையாளர்.

(சி/4780)

தவறிவிட்டது

20-06-1990 மாலை 3 மணிக்கு சாவகச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மினிபஸ்ஸில் பயணம் செய்த போது எனது கைப்பையை அருகில் இருந்த பெண்ணிடம் கொடுத்து விட்டு அதனைத் திரும்பவும் பெற்றுக் கொள்ளாமல் இறங்கி விட்டேன். தயவு செய்து கைப்பையை நாவலர் வீதியில் உள்ள உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும் படி அப் பெண்மணியைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். [13552]

இடமாற்ற அறிவித்தல்

அண்ணா கோப்பிக் கடை

நவீன சந்தை யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த எமது ஸ்தாபனம் மக்களுக்கு தொடர்ந்தும் சேவையாற்றும் முகமாக தற்காலிகமாக திருநெல்வேலிச் சந்திக் கருகாமையில் யாழ்ப்பாண நோக்கிய பாதையில் சாயி மெடிக்கலுக்குப் பக்கத்தில் நிறுவப்பட்டுள்ள தென்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அண்ணா கோப்பி,
திருநெல்வேலி.

(சி-4774)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திரு. மார்க்கண்டு நடராஜா

(இளைப்பாறிய புகையிரத தலைமைப் பாதுகாவலர்)

தோற்றம்: 02 – 04 – 1919
மறைவு: 02 – 06 – 1990

எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வமே உம்மையும் உமது செயல்களையும் நினைந்து பரிதவிக்கின்றோம். எம் தவிப்பை எப்போது தீர்ப்பாய் ஐயா.

உமது பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அன்னாரது ஆத்மா சாந்திக்காக 02-07-90 திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

★ சூழ்நிலை காரணமாக தனிப்பட்ட அழைப்புக்கள் அழைக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

மனைவி குடும்பத்தினர்.

மார்க்கண்டு இல்லம்,
சுன்னாகம்.

[13548]

31-ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

திரு. ஆறுமுகம் சிதம்பரப்பிள்ளை

Retd. C. C. S.

மலர்வு: 04 - 02 – 1906
நிறைவு: 01 – 06 – 1990

அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எங்களையெல்லாம் வழிகாட்டியதுடன் திடீரென எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னார் சுகவீனம் உற்று இருந்தபோது மிகுந்த உதவி புரிந்த யாழ். போதனா வைத்தியசாலை டாக்டர்களுக்கும் மற்றும் ஊழியர்கட்கும், ஈமக்கிரியைகளின்போது பங்குகொண்டோருக்கும், அனுதாபந்தி அனுப்பியோருக்கும் எமது இதயங் கனிந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

அன்பு மக்கள், சகோதரிகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

காந்தி நிலையம்,
இமையாணன்,
உடுப்பிட்டி. (13534)

31 ஆம் நாள் நினைவுப்போற்றல்



அமரர்

திரு. செல்லையா பொன்னம்பலம்

கலியுகத்தில் உதித்தது: 23-03-1923
கந்தன் கழலடியில் கலந்தது: 01-06-1990

உலகியல் வெற்றி கண்ட ஒருவரைப்போற்றுகின்றோம் விலைமதிப்பில்லாத் தொண்டின் மேன்மையை போற்றுகின்றோம் தலைமையே பூணத்தக்கதகுதியைப் போற்றுகின்றோம் நிலைபெறும் புகழும் போற்றி நினைவையும் போற்றுகின்றோம்.

பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''சர்வசித்தி''
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (13533)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

உரியவர் கை சேருமா?

இலங்கை அரசாங்கம் வீடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து, அமெரிக்கா ஒரு கோடி ரூபாவை உதவித் தொகையாக வழங்கி இருக்கிறது. வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடம்பெயர்ந்த வர்களுக்கு உதவுமாறு அரசு வீடுத்த வேண்டுகோளை ஏற்றே, அமெரிக்க அரசு நிதி உதவி வழங்கி இருக்கிறது.

வடக்கு-கிழக்கில் கடந்த இருபது நாட்களாக யுத்த நிலை நீடித்து வருகிறது. எட்டு மாவட்டங்களிலும் நடக்கும் கடும் போரினால் லட்சோப லட்சம் மக்கள், தங்கள் சொந்த இடங்களை வீட்டு இடம்பெயர்ந்து அகதிகளாகி உள்ளனர்.

இந்த அகதிகளில் 95 சத வீதமானவர்களும் தமிழ் பேசும் மக்கள் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. கூடவே 5 சத வீதத்தினர் சிங்கள மக்களாக இருக்கக் கூடும்.

அகதிகளுக்கு உதவுங்கள் என்ற கோரிக்கையை அரசாங்கம் வெளிநாடுகளுக்கு வீடுக்கும் போது, பெரும்பாலும் பாதிக்கப் பட்ட தமிழர்களைக் கருத்தில் கொண்டே, அவர்களுக்கு உதவ வேண்டும் என்று தினைத்துத்தான் வெளி நாடுகள் தம்மாலான உதவியைச் செய்யும் என்பது துலக்கம்.

ஆனால், ஆகாயம்-கடல்-தரை, ஆகிய மூன்று தரப்புகளில் இருந்தும் மேற்கொள்ளப்பட்ட இராணுவத் தாக்குதல்களுக்கு ஆளாகி அவஸ்தைப்படும் தமிழ் அகதிகளுக்கு, தக்க விதத்தில், உரிய நேரத்தில், நிவாரணம் மற்றும் உதவிகள் கிடைக்குமா?

கடந்த ஏழு வருடங்களாக தமிழர்கள் கண்ட அனுபவத்தில் இல்லை, இல்லை என்பதே பதில்! நிவாரணம் புனர்வாழ்வு, புனர் நிர் மாணம் என்பவற்றுக்கு வெளிநாடுகள் கொட்டிக் கொடுத்த பணத்தில் தமிழ்ப் பகுதிகளுக்கு கிள்ளித் தெளித்த கதை பழையது. பெரும் பகுதிபணம் அரசாங்கப் பணமாக மாறி தென்னிலங்கை மாவட்டங்களில் புதுத்திட்டங்களைப் பரிணமித்ததும் பழங்கதையே.

1983 முதல் நிவாரணம், புனரமைப்பு, புனர்வாழ்வுக்கென வெளி நாடுகளில் இருந்து வந்த பணம்; அதில் வடக்கு- கிழக்குக்கு ஒதுக்கப்பட்ட, வழங்கப்பட்ட பணம், அங்கு ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள்; இவை பற்றிய சரியான கணக்கு தமிழ் மக்களுக்கு இன்னமும் தெரியாது!

வடக்கு - கிழக்குப் புனர் வாழ்வு, புனர் நிர்மாணத்துக்குக் கிடைத்த பணம் அதிகாரிகள், அமைச்சர்கள் கை மாறியதா அல்லது புத்தகம் மாறியதா என்று தமிழர்கள் சந்தேகப்படவும் இடமுண்டு.

அப்படியிருக்க இந்தமுறை கிடைக்கும் வெளிநாட்டு உதவி நிதிகள், அவலப்படும் தமிழர்களின் கை சேரும் என்று எப்படி எதிர்பார்ப்பது? உரிய நேரத்தில், கக்க வித்தில் கிடைக்கும் என்று எவ்வாறு நம்புவது?

இதனை அறிந்தும் அறியாதது போல, வெளிநாடுகள் தமிழர்கள் அவலப்படும் போது அவர்களுக்கு உதவ வென வழங்கும் பணத்தை, அரசிடம் கொடுப்பதில் அர்த்தமில்லை, உரியவன் கைக்கு அது சேர வேண்டுமானால் செஞ்சிலுவைச் சங்கம், ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான ஸ்தாபனிக ராலயங்கள் போன்ற சர்வ தேச தொண்டர் நிறுவனங் களிடம் உலக நாடுகள் தமது உதவி நிதிகளை வழங்க வேண்டும்.

இருபது நாட்களாக தமிழர் வாழும் பகுதிகளுக்கு உணவுப் பொருள்களை அனுப்பி வைக்காத அரசா நிவாரண உதவிகளை உடன் அனுப்பப் போகிறது?

அகதிகளுக்கு உதவுவதற்கு என்று உலக நாடுகள் வழங்கும் பணம், பாதுகாப்பு நிதிக் கணக்குப் புத்தகத்தில் சேர்ந்து, தமிழ்ப் பகுதிகளில் போர் நடத்தி அவற்றையும் இங்கு வாழும் மக்களையும் அழிக்கப்பயன் படுத்தப்படலாம்என்று தமிழர்கள்அச்சம் கொண்டால், அது எப்படித் தப்பாகும்?

பல்கலைக்கழக மாணவர்களுக்கு முதலுதவிச் சிகிச்சை வகுப்புகள்

யாழ்ப்பாணம் ஜூலை1

யாழ்-பல்கலைக்கழக மாணவர்களுக்கு முதலுதவிச் சிகிச்சைக்கான முதலுதவிப்பயிற்சி வகுப்பு நடத்தப்படும்.

மறுமலர்ச்சிக் கழகம்இதற்கு ஒழுங்கு செய்துள்ளது.

நான்காம் திகதி காலை 9 மணிக்கு யாழ்-பல்கலைக்கழகத்தில் இந்தப் பயிற்சி வகுப்பு ஆரம்பமாகும்.

யாழ் - பல்கலைக்கழகத்தில் நடைபெறும் இந்தப்பயிற்சி வகுப்பில் இணைந்துகொள்ள விரும்பும் சகல மாணவர்களும் தமது பெயர்களை மறுமலர்ச்சிக் கழக அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு மறுமலர்ச்சிக்கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் ஸ்ரீலங்கா அரசினால் மேற் கொள்ளப்பட்டு வரும் குண்டுத்தாக்குதல்கள், ஹெலிக் கொப்டர் தாக்குதல்கள் மற்றும் ஷெல் தாக்குதல்களில் காயமடையும் மக்களுக்கு உடனடிச் சிகிச்சை வழங்குவதற்காகவே இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாக மறுமலர்ச்சிக் கழகத் தலைவர் திரு. வே.அருணோதயம் அறிவித்துள்ளார். [இ-10]

சுத்திகரிப்பு தொழிலாளரை அனுப்பி உதவக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 1

அகதி முகாம்களுக்குத் தேவையான சுத்திகரிப்புத் தொழிலாளர்களை அனுப்பி உதவுமாறு உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்பு அதிகாரிகளை யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

மலசலகூட சுத்திகரிப்புக்கு கிருமிநாசினிகள் தேவைப்படின் தம்முடனோ அல்லது செஞ்சிலுவை சங்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

தற்போது வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் உள்ள உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுள்ளார். (இ-மு)

கிளிநொச்சி - முரசுமோட்டை வைத்திய சாலைகள் இணையும்

யாழ்ப்பாணம், ஜூலை 1

கிளிநொச்சி வைத்திய சாலையை முரசுமோட்டை மிசன் வைத்திய சாலையுடன் இணைக்கும் பிரதான சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை நடவடிக்கை எடுத்துள்ளார்.

கிளிநொச்சி வைத்திய சாலை மூடப்பட்டு கிளிநொச்சி வை. எம். ஏ. கட்டடத்தில் இயங்கிவருகிறது.

அங்கு போதிய வசதிகள் இல்லாத காரணத்தால் முரசுமோட்டைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

நீர்கொழும்பு

கரையோரப் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது

கொழும்பு, ஜூலை 1

நீர்கொழும்பு கடலோரப் பகுதியின் பாதுகாப்பை பாதுகாப்புப் படையினர் பலப்படுத்தியுள்ளனர்.

வடக்கு - கிழக்கு யுத்த நிலைமை காரணமாக போராளிகள் நீர்கொழும்புக் கடல் மார்க்கமாக தப்பிச் செல்லலாம் என்று பாதுகாப்புப் படையினர் சந்தேகிப்பதால் இந்த முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுப்பட்டிருப்பதாக ஏஜென்சிச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

ஹெந்தளை, குடாப்பாடு, மிரிஹன ஆகிய பகுதிகளில் ஆயுதம் தரித்த பொலீஸ் கோஷ்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும் அச்செய்திகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

ஜனாதிபதியைச் சந்திக்க தமிழ்க் குழுக்கள் முயற்சி

கொழும்பு, ஜூலை 1

வடக்கு- கிழக்கு நெருக்கடி தொடர்பாக ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்துப் பேச தமிழர் அமைப்புக்கள் சில முயற்சி எடுத்து வருவதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இம் முயற்சியில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எப் மற்றும் புளொட் அமைப்புக்களே ஈடுபட்டுள்ளன என்றும் அந்தக் கொழும்புச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

மரண விசாரணை இல்லை

கொழும்பு, ஜூலை 1

மட்டக்களப்பு மாவட்டத்தில் அகால மரணத்துக்கு உள்ளாகுபவர்களின் சடலங்கள் எதுவித மரண விசாரணையும் இன்றி தகனம் செய்யப்படுகின்றன. (இ-எ)

இராணுவத் தபால் சேவை

கொழும்பு ஜூலை 1

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தற்போது யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இலங்கை ஆயுத படையினரின் நன்மை கருதி தனியான தபால் விநியோக சேவை ஒன்றை பாதுகாப்பு அமைச்சு ஆரம்பித்துள்ளது.

இதற்கு 'இராணுவ தபால் சேவை' என்று பெயரிடப் பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் பணி புரியும் ஆயுத படையினருக்கு தபால்களை அனுப்ப விரும்பும் உற்றார், உறவினர்கள், அவற்றை பாதுகாப்பு அமைச்சில் அதற்கு என்று ஆரம்பிக்கப்பட்ட தனிப்பிரிவுக்கு அனுப்பி வைக்கும் படி பாதுகாப்பு அமைச்சு கோரியுள்ளது. (இ-எ)

இதுவரை ரூ 10 லட்சம் உதவி

கொழும்பு, ஜூலை 1

வடக்கு- கிழக்கு பகுதிகளில் உள்ள அகதிகளுக்கு இதுவரை பத்து லட்சம் ரூபா பெறுமதியான உணவு, உடை மற்றும் மருந்து வகைகள் செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக குழுவால் விநியோகிக்கப்பட்டுள்ளன. (இ-எ)

கல்முனையில் படையினர் தேடுதல்

கொழும்பு, ஜூலை 1

கல்முனை நகரில் ஆயுத படையினர் வீடு வீடாகத் தேடுதல் நடத்தினர்.

சாய்ந்தமருதுக் பிராமம் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டது என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (இ-எ)

மட்டக்களப்பு: தேவையான உணவு பொருள்

கொழும்பு, ஜூலை 1

மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் ஏழு லொறிகளில் வாகனேரி சென்றடைந்தன என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் செ யோகநாதன் இந்த உணவுப் பொருள்களைப் பொறுப்பேற்று விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பார் என்று அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

கொறியில் வந்தனர்

கொழும்பில் இருந்து லொறி ஒன்றில் பிரயாணம் செய்தோர், மூன்று தினங்களின் பின்பு சாவகச்சேரியை அடைந்தனர்.

ஆண்களும் பெண்களுமாக சுமார் அறுபது பேர் வரை லொறியில் வந்திருந்தனர். லொறிக் கட்டணமாக தலா 500 ரூபா இவர்கள் செலுத்தி இருந்தனர் (இ-31)

154 போராளிகள் விடுவிப்பு; அகதி முகாம்களுக்கு மாற்றம்

சென்னை, ஜூலை 1

சென்னை மத்திய சிறையில் வைக்கப்பட்டிருந்த 154 இலங்கைத் தமிழ்ப் போராளிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

பின்னர் அவர்கள் அனைவரும் திருச்சியில் கொட்டப்பத்த, மற்றும் மண்டபம் அகதி முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

நீதி மன்ற உத்தரவின் மீதுதான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் இதில் சம்பந்தப்பட்டபோராளிகள் அனைவரும் ரெலோ, ஈபிஆர் எல் எப், ஈஎன் டி, எல் எப், ஈரோஸ் ஆகிய அமைப்புக்களைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னர் சென்னை மத்திய சிறையில இலங்கைப் போராளிகளால் அரைமணி நேரம் குழப்பம் நிலவியதாகவும், அதன் காரணமாக இரண்டு சிறைக்காவலர்கள் காயமடைந்தனர் என்றும் ராய்ட்டர் செய்தி ஒன்று தெரிவித்தது.

சிறைவைக்கப்பட்டிருந்த போராளிகளுக்கு வழங்க அவர்களின் உறவினர்கள் வாழைப்பழம் கொண்டு வந்தனர். அவற்றைக் கொடுப் பதற்கு சிறைக் காவலர்கள் அனுமதிக்க மறுத்தனர். இதனைத் தொடர்ந்தே குழப்பம் ஏற்பட்டது என்று சென்னை மத்திய சிறை அதிகாரி திரு. வைக்கும் ராய்ட்டர் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

சர்வ கட்சி மாநாட்டில் அதிகாரப் பரவல் ஆராய்வு

கொழும்பு, ஜூலை 1

எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டுப் பிரதிநிதிகள் கூட்டத்தில் அதிகாரப் பரவலாக்கல் பற்றிய விஷயங்கள் ஆராயப்பட உள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

நீதி அமைச்சர் சாகுல்ஹமீது தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

வெகுஜனத்தொடர்பு சாதனங்களுக்குக் கூடுதல் சுதந்திரம் வழங்குவது பற்றி வெளிக்கிழமை நடந்த கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டது.

பத்திரிகைகளுக்கு என தனி ஆணைக்குழு ஒன்றை அமைப்பதா?

'ஏனைய வெகுஜனதொடர்பு சாதனங்களுக்கு என ஒரு தனி ஆணைக்குழு ஒன்றை அமைப்பதா?

அல்லது இரண்டுக்கும் சேர்ந்து பொதுவான ஓர் ஆணைக் குழுவை அமைப்பதா?

— இவை பற்றியும் கூட்டத்தில் ஆராயப்பட்டது. இது குறித்தும் இது சம்பந்தமாக பொதுமக்கள் அனுப்பி வைக்கும் மகஜர்களையும் பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்க உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டது.

இந்த உபகுழு எதிர்வரும் 8 ஆம் திகதி கூடி முடிவு செய்யும்.

இதனிடையில் மனித உரிமைகளைப் பேணுவது சம்பந்தமாக சர்வகட்சி மாநாட்டுப் பிரதிநிதிகள் கூட்டத்தினால் நியமிக்கப்பட்ட மனித உரிமைக்குழு எதிர்வரும் ஏழாம் திகதி கூடி விவாதிக்க இருக்கிறது. (இ-எ)

கும்பாபிஷேகம்

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் அமைந்திருக்கும் துர்க்காம் பிகை தேவஸ்தான மகாகும்பாபிஷேகம் நாளை திங்கட் கிழமை காலையில் நடை பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து சமயச் சொற் பொழிவும், கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

போர் நடவடிக்கைகளினால் கடந்த ஆறு நாட்களில் இருநூறு பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட போர் நடவடிக்கைகளினால் கடந்த ஆறு நாட்களில் மட்டும் 200 பேர் படுகாயடைந்தனர்.

மானிப்பாயில் இயங்கிவரும், யாழ். போதனா வைத்திய சாலைப் பதிவுகளிலிருந்து இந்த விவரம் தெரியவந்துள்ளது.

ஆஸ்பத்திரிப் பதிவுகளின் பிரகாரம் ஜூன் மாதம் 23 ஆம் திகதி 12 பேரும், 24 ஆம் திகதி 69 பேரும், 25 ஆம் திகதி 38 பேரும், 26 அம் திகதி 20 பேரும், 27 ஆம் திகதி 31 பேரும், 28 ஆம் திகதி 39 பேரும் படுகாயம் அடைந்த நிலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-9)

எல்லைப்புற....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திப் பொலீஸ் மா அதிபர் மாநாட்டில் தகவல் வெளியிடுகையில் தெரிவித்த தாவது:-

★ நொச்சியாகம முதல் புல்மோட்டை வரை பாதுகாப்பு முழு அளவில் பலப்படுத்தப்பட்டுள்ளது.

★ மட்டக்களப்பு-பொலன்னறுவை எல்லையிலும் பாதுகாப்பு முழு அளவில் ஸ்திரப் படுத்தப்பட்டுள்ளது. (அ)

சீவல் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 1

தற்போதைய சூழ்நிலையில் தமது தொழிலை இழந்து தவிக்கும் ஆயிரத்து 500 சீவல் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க அரசுசார் பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

இப்படிக் கோரிக்கை விடுத்திருக்கிறது வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கு விடுக்கப்பட்ட இந்தக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கடந்த சில நாட்களாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப் பட்டு வரும் இராணுவ நடவடிக்கை காரணமாக சீவல் தொழிலையே தமது ஜீவனோபாயமாக நம்பிவாழும் 1500 குடும்பங்கள் தொழில்ரீதியாகவும், உடைமைகள், உறைவிடங்களை இழந்தும் பெரும்பாதிப்புக்குள்ளாகி இடம்பெயர்ந்து உள்ளனர்.

இந்த நிலையில் தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச்சங்கங்களை அங்கத்துவமாகக் கொண்டுள்ள வடமாகாண தெ. ப. பொ. கூ. சங்க சமாசம் இயங்கிவந்த காங்கேசன் துறை வீதியில் அமைந்துள்ள கட்டடமும் தாக்குதலுக்கு உள்ளாகி முற்றாகச் சேதம் அடைந்துள்ளது.

இதனால் சங்கங்களின் உடனடித் தேவைகளைக் கவனிக்க இயலாதநிலையில் உள்ளது.

எனவே தொழில்ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள இம் மக்களுக்கு தெ. ப. பொ. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தொடர்புகொண்டு நிவாரண உதவி வழங்குமாறுநிவாரணம் வழங்கும் ஸ்தாபனங்களைக் கோருகிறோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-மு)

ஆவணங்கள் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

மக்கள் வங்கியின் யாழ். பிரதானவிதி பிரதேச அலுவலகத்தில் இருந்த அனைத்து ஆவணங்களும் ஸ்ரான்லி வீதியில்உள்ள மக்கள்வங்கிக்கிளைக்குதற்காலிகமாக மாற்றப்பட்டு வருகின்றன.

கடந்த வெள்ளியன்று பிரதான வீதியில் இடம்பெற்ற விமானக் குண்டுவீச்சின் போது வங்கியின் மேல்பகுதி பலத்த சேதமடைந்ததுடன் ஆவணங்களில் ஒருபகுதியும் நாசமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

வங்கியின் கட்டட கீழ்ப் பகுதியிலும் பெரும் வெடிப்புகள் காணப்படுகின்றன. (உ-10)

3 மாதங்களுக்குரிய மருந்து அனுப்பிவைக்க கோரிக்கை

யாழ். மாவட்டத்தில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய மூன்று மாதத்துக்குத் தேவையான மருந்து வகைகளை உடன் அனுப்பி வைக்குமாறு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என் கனகசபை சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல வைத்திய சாலைகளிலும் அவசர மருந்து வகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (இ-3)

விடுதலைப் புலிகள்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தம் ஸ்ரீலங்கா இராணுவத்தால் மீறப்பட்டு முடிவடைந்தது.

இருதரப்பினருக்கும் இடையே போர் மூண்ட நிலையில், கொழும்பிலுள்ள சில தரப்பினர் எமது கட்சியின் பொதுச் செயலாளர் பாலகுமாரன், ஜனாதிபதியைச் சந்தித்து உண்மை நிலையை விளக்குவதற்காக ஏற்பாடுகள் செய்தனர்.

அத்தருணத்தில் ஜனாதிபதியுடன் நேரடிப் பேச்சுவார்த்தைக்கு தமிழ் பேசும் மக்கள் மீது இராணுவ அடக்குமுறையின் அனாத்தங்கள் பற்றி விளக்கி சகுண நிலைமை தோன்ற முயற்சி செய்யுமென நாம் நினைத்தோம்.

எனினும் பின்னர் கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் இராணுவத்தால் தொடர்ந்தும் பழிவாங்கப்படமையாலும், கண்மூடித்தனமான விமானத்தாக்குதல்களாலும், கொழும்பில் எமது தோழர்கள் கைது செய்யப்பட்டமையாலும் ஜனாதிபதியைச் சந்திக்கும் எண்ணம் கைவிடப்பட்டது.

மேற்குறிப்பிட்ட காரணங்களை விளக்கி ஜனாதிபதிக்கு பாலகுமாரனால் 26 - 06 - 90 அன்று கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டது

இக்கடிதம் பற்றி கொழும்பிலிருந்து வரும் சில பத்திரிகைகள் ஊகத்தின் அடிப்படையில் சில செய்திள் வெளியிட்டுள்ளன. இந்நிலையில் உண்மைகளை விளக்கி நேற்று கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

மேற்படி கடிதம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மேல் கொடுக்கப்பட்டுள்ள யுத்தம் என்பது முழுக் தமிழ் பேசும் மக்கள் மீதும் தொடுக்கப் பட்ட யுத்தத்திற்குச் சமானம் என்பதையும்-

தமிழ் பேசும் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள சகல அடக்கு முறைகளும் உடன் நிறுத்தப்படாவிட்டால் இதுவரை காலமும் சிங்கள அரசியல் தலைமைத்துவங்கள் கமிழ் பேசும் மக்களுக்கு இழைத்த நம்பிக்கைத் துரோகத்தையே ஜனாதிபதி பிரேமதாஸாவும் இழைத்தவர் ஆவார் என்பதையும் வலியுறுத்தி எழுதப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

வங்கி- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார்.

வங்கி ஊழியர்கள் அனைவரையும் நாளை இரண்டாம் திகதி புதிய இடத்திற்கு வருமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (அ)

திருமலை---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லுவைச் சங்கத்தின் வைத்திய குழு 4 இடங்களில் தங்கிச் சிகிச்சை அளித்து வருகிறது. அளம்பில், தண்ணீரூற்று, புதுக்குடியிருப்பு உடையார் கட்டு ஆகிய இடங்களில் வைத்து வைத்தியக் குழு சிகிச்சை அளித்து வருகிறது.

அங்கு மருந்துக்கு ஏற்பட்ட பற்றாக்குறையை அடுத்து நேற்று யாழ்ப்பாணத்தில் இருந்து செஞ்சிலுவைச் சங்கம் மருந்துவகைகளை அனுப்பியிருந்தது. (இ-3)

லித்து ஏனியா சுதந்திரப் பிரகடனம் 100 நாட்களுக்கு இடைநிறுத்தம்

வில்நியஸ், ஜூலை 1

தனது ஒருதலைப்பட்ச சுதந்திர பிரகடனத்தை நூறு நாட்களுக்கு இடைநிறுத்தி வைப்பது என்று லித்துவேனிய அரசு நேற்றுத் தீர்மானித்தது.

இது சம்பந்தமான பிரேரணை ஒன்று லித்துவேனிய நாடாளுமன்றத்தில் பெரும் பான்மை வாக்குக்களால் நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 69 வாக்குகளும் எதிராக 35 வாக்குகளும் கிடைத்தன.

மீசாலியத் யூனியனில உள்ள மூன்று பால்டிக் மாநிலங்களில் லித்து ஏனியாவும் ஒன்று.

இறைமையுள்ள ஒரு சுதந்திர நாடாகப் பிரிந்து செல்லும் சுதந்திரப் பிரகடனத்தை கடந்த பெப்ரவரியில் லித்துவேனியா நாடாளுமன்றம் நிறைவேற்றியமை தொடர்பாக மாஸ்கோ அரசுடனான நெருக்கடி மோசமானது.

பேச்சுக்கள் நடத்தித் தீர்வு காண முன்வந்த மாஸ்கோ அரசு, அதற்கு நிபந்தனையாக சுதந்திரப்பிரகடனத்தை இடைநிறுத்தம் செய்ய வேண்டும் எனறு கோரிவந்தது.

இதனிடையில் பொருளாதார முற்றுகை ஒன்றையும் லித்துவேனியா மீது மாஸ்கோ அரசு விதித்தது.

சுதந்திரப்பிரகடனம் இடைநிறுத்தம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொருளாதார முற்றுகை [illegible] என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கட்டுவதில் கைதேர்ந்தவர்கள்
கண்ணாடி வழங்குவதில் அனுபவஸ்தர்கள்
பல்கட்டுவதற்கும்
கண்ணாடி பெற்றுக் கொள்ளவும்
எம்மை நாடுங்கள்!
முப்பது வருட அனுபவ பாதையில் ...
பி. ஐ. பர்னான்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்பாக)
யாழ்ப்பாணம்.

உதயன்

01 - 7 - 1990 ஞாயிற்றுக்கிழமை

வாடிக்கையாளர்களுக்கு
முக்கிய அறிவித்தல்
நாட்டு நிலைமை காரணமாக
எமது யாழ்நகர ஆஸ்பத்திரி வீதி கிளை
தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.
சகல தேவைகளுக்கும் எமது பிரதான வீதி
தலைமை நிலையத்துடன்
தொடர்பு கொள்ளவும்.
பி. ஐ. பர்னான்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்பாக)
யாழ்ப்பாணம்.

பாலைதீவில் பீரங்கிப் படகு

குருநகர், ஜூலை 1

ஸ்ரீலங்கா கடற்படையின் பீரங்கிப் படகொன்று பாலைதீவுக் கடலில் நங்கூரமிட்டு நிற்கிறது

நேற்று முன்தினம் இரவு கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்கள் பீரங்கிப் படகைக் கண்டு பீதியுடன் திரும்பினர் என்று கூறப்படுகிறது.

மரண அறிவித்தல்கள்

சங்கரப்பிள்ளை கனகராயர்

இளைப்பாறிய பிரதிப்பணிப்பாளர் நிர்வாக சேவை, இறைச்சேரி (Asst. Director of Establishments, Treasury) சங்கரப்பிள்ளை கனகராயர் காலமானார். இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், வனஜா, சங்கரப்பிள்ளை (Australia) பத்மஜா (ஆசிரியை மகாஜனாக் கல்லூரி), பங்கஜா (ஆசிரியை, தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி), கதிர்காம சேகரன் (Hongkong Bank Colombo) ஆகியோரின் அன்புத்தந்தையும், நாகராஜா (Cement Corporation, (K. K. S.), றோஸ்மலர் (Australia), லோகநாதன் Irrigation Dept. Colombo) ஆகியோரின் அகன் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 30-06-90 சனிக்கிழமை நடைபெற்றது.

உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் இவ்வறிவித்தலை அறியத்தருகிறோம்.

தகவல்:
செ. நாகராஜா (மருமகன்)

சங்கடந்தனை,
தெல்லி – கிழக்கு,
தெல்லிப்பளை. [13555]

சு. தபேந்திரன்

(இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரும், பிரபல சோதிடரும்)

உரும்பிராய் தெற்கு சிவகுல வீதியைச் சேர்ந்த சு. தபேந்திரன் காலமானார். இவர் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் உஷாந்தினி, சாமினி, வாசுகி (ஜேர்மனி), தவராஜன் (பிரான்ஸ்), யோகந்தி ஆகியோரின் தகப்பனாரும், நவராஜா (பெற்றோலியக் கூட்டுத்தாபனம் யாழ்), ஜெயக்குமார் (ஜேர்மனி), ஸ்ரீகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், தனுஷன், தமயந்தி, தாட்சாயினி, சதீஸ், தர்சன், பிரியகாந், சிந்துஜா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 01 – 07 – 1990 இன்று காலை10 மணிக்கு நடைபெறும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. தவராஜா,
(மருமகன்)

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். [13549]

சுப்பிரமணியம் பேரம்பலம்

அனலைதீவை பிறப்பிடமாகக் கொண்டவரும் ஈச்சமோட்டை கடற்கரை வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சுப்பிரமணியம் பேரம்பலம் 29-6-90 சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் நாகமுத்துவின் மகனும் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் மகேஸ்வரி, புவனேஸ்வரி [கனடா], கிருபானந்தன் [கிழக்கு ஜேர்மனி], ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாலன்[ஜேர்மனி], குணபாலசிங்கம் [கனடா], ஆகியோரின் அன்பு மாமனாரும் சுதாஸ்வரி, சுஜாதா,ரஞ்சித் ஆகியோரின் பேரனும் மீனாட்சி, காலம்சென்ற வீரகத்தி ஆகியோரின் சகோதரனும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 1-7-90காலை10.00 மணியளவில் நடைபெற்று தண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்.
ஈச்சமோட்டை. [13554]

திருமதி
மங்கயர்க்கரசி லோகேஸ்வரன்

(ஆசிரியை, புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி)

புத்தூரைச் சேர்ந்த திருமதி. மங்கயர்க்கரசி – லோகேஸ்வரன் அவர்கள் (ஆசிரியை ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி – புத்தூர்) சனிக்கிழமை 30-06-1990 இல் காலமாகி விட்டார். இவர் சட்டத்தரணி லோகேஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியும், பிரவாகினி (வேம்படி மகளிர் கல்லூரி), என்குணன் (யாழ் இந்துக் கல்லூரி), அவர்களின் அன்புத் தாயாரும், கோப்பாய் திரு. அ. வி. மயில்வாகனம் (முன்னாள் அரச மொழித் திணைக்கள ஆணையாளர்) அவர்களின் சிரேஷ்ட புத்திரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று ஞாயிறு காலை 10.00 மணிக்கு புத்தூர் சுடும்ப மயானத்தில் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சட்டத்தரணி லோகேஸ்வரன்.
(13553)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 01-07-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வடமராட்சியில் கடற்படையின் நடமாட்டம் பெருமளவு அதிகரிப்பு

பீரங்கிப் படகுகள் ரோந்து

வல்வெட்டித்துறை, ஜூலை 1

வடமராட்சி கடற்பரப்பில் கடற்படையினரின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

கடந்த வெள்ளியன்று இரு கப்பல்களும், ஐந்து பீரங்கிப் படகுகளும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன.

அதே சமயம் மூன்று ஹெலிக் கொப்டர்களும் இரண்டு பொம்மர்களும் வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

மாலை 6 மணியளவில் கடற் பிரதேசத்தையும் பொலிகண்டி, சமரபாகு, நவிண்டில், உடுப்பிட்டி, வல்வெட்டித் துறை ஆகிய பகுதிகளையும் உள்ளடக்கி ஹெலியிலிருந்து கலபரி தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

மண்டான் பகுதியிலும் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன. மக்கள் பெருமளவு அகதிகளாக வெளியேறினர். (இ-160)

தேசிய சேமிப்பு வங்கியின் கட்டடம் முற்றாகச் சேதம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ். பிரதான வீதியில் உள்ள தேசிய சேமிப்புவங்கிக் கிளையின் மேல்மாடி கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற விமானத் தாக்கு தலினால் முற்றாக இடிந்திருக்கிறது.

இதனால் இந்த வங்கிக் கிளையின் முக்கிய ஆவணங்களும் சேதமடைந்திருக்கின்றன.

வங்கிக் கட்டடம் இடிந்ததை அடுத்து மேல் மாடியில் இருந்த பல பொருள்கள் கீழ்மாடியில் சிதறுண்டு கிடந்ததைக் காணமுடிந்தது.

பொருள்களை அகற்றும் முயற்சியில் வர்த்தகர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ். பிரதான வீதி கடைகளில் இருந்த பொருள்களை நேற்று அக்கடைகளின் உரிமையாளர்கள் அப்புறப்படுத்தினர்.

இந்த வீதியில் இருந்த தபால் யார் மருத்துவமனை ஒன்றில் இருந்தும் முக்கிய உபகரணங்கள் வேறு இடத்துக்கு மாற்றப்படுவதைக் காண முடிந்தது.

பிரதான வீதிப் பகுதியில் கடந்த வெள்ளியன்று இடம் பெற்ற விமானக் குண்டு வீச்சினால் இருபத்தி ஐந்துக்கும் அதிகமான கடைகள் நாசமாகியுள்ளன. (உ-10)

புடைவைக்கட்டில் 5,000 பேர் காத்து நிற்பதாகத் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 1

முல்லைத்தீவுக்கு வருவதற்காக புடவைக்கட்டுத் துறையில் 5 ஆயிரம் பேர் காத்திருக்கிறார்கள்.

திருமலை நகரப் பகுதியில் இருந்து வெளியேறிய மக்கள் புடைவைக்கட்டில் இருந்து முல்லைத்தீவு நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள்.

நகரப்பகுதியை படையினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததை அடுத்து நகருக்கு அப்பால் உள்ள கிராமங்களில் பொம்மர், ஹெலி மற்றும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் அப்பகுதிகளைச் சேர்ந்த மக்களும் முல்லைத்தீவு வருவதற்கு பெரும் பிரயத்தனம் செய்துகொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. (இ-3)

குருநகர்: 50 வீடுகள் சேதம்

குருநகர், ஜூலை 1

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற விமான ஹெலி தாக்குதல்களில் குருநகரில் மட்டும் சுமார் 50 வீடுகள் சேதம் அடைந்துள்ளன.

ஐஸ் பிளான்ட் வீதி, மத்திய மேற்கு வீதி, குருநகர் முதலாம் குறுக்கு வீதி ஆகியவற்றில் 10 வீடுகள் முற்றாகச் சேதம் அடைந்துள்ளன.

அரச ஐஸ் உற்பத்திச் சாலை, சீ நோர் வலைத் தொழிற்சாலை என்பனவும் சேதமடைந்துள்ளன.

குருநகர் மக்கள் ஏற்கனவே இடம் பெயர்ந்து சென்றிருந்ததால் பெரும் உயிர் இழப்புகள் தவிர்க்கப்பட்டன. (இ-51)

விஞ்ஞான பீட மாணவருக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 1

தற்போதைய நெருக்கடி நிலைமைகள் காரணமாகத் தமது சொந்த இடங்களுக்குச் செல்லமுடியாத நிலையில் இருக்கும் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த யாழ். பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானபீட மாணவர்கள் தமது பெயர்களை விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தில் பதிவுசெய்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வேண்டுகோளை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் விடுத்துள்ளது. (உ-10)

அகதிகளுக்கு உதவக் குழு

சாவகச்சேரி, ஜூலை 1

சாவகச்சேரிப் பகுதிக்கு இடம்பெயர்ந்து வந்துள்ள குடும்பங்களைச் சேர்ந்த அகதிகளுக்கு உதவுவதற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம் பிள்ளை தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் செயலாளராக அறவழிப் போராட்டக் குழுவின் செயலாளர் திரு. க. ஜீங் கதாஸும் பொருளாளராக நகரசபை ஆணையாளர் திரு. த. நவரத்தினராசாவும் கடமையாற்றுவர். (இ-31)

மாலை 6 மணியளவில் கடற் பிரதேசத்தையும் பொலிகண்டி, சமரபாகு, நவிண்டில், உடுப்பிட்டி, வல்வெட்டித் துறை ஆகிய பகுதிகளையும் உள்ளடக்கி ஹெலியிலிருந்து கலபரி தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

மண்டான் பகுதியிலும் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன. மக்கள் பெருமளவு அகதிகளாக வெளியேறினர். (இ-160)

தஞ்சாவூரில் இருவர் கைது!

சென்னை, ஜூலை 1

தஞ்சாவூர் மாவட்டப், வேதாரண்யத்தில் நேற்று இரண்டு இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஒருவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர். மற்றவர் யாழ்ப்பாணம் வாசி.

உரிய பாஸ்போட்டுக்களை வைத்திருக்கத் தவறிய காரணத்திற்காக இவர்கள் இருவரும் கைதானார்கள் என்று பொலீஸ் தரப்பில் கூறப்பட்டது. [உ-எ]

யாழ். வந்த பிரதிநிதி கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாணம் வந்த செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு இலங்கைப் பிரதிநிதி திரு. பிலிப்கொன்ரசா நேற்றுக் காலை கொழும்பு திரும்பினார்.

போதனா வைத்தியசாலை, பாதுகாப்பு, உணவு விநியோகம் சம்பந்தமாக முக்கிய மானவர்களைக் சந்தித்தபின் நேற்றுக்காலை அவர் கொழும்பு திரும்பினார்.

அவருடன் சர்வதேசக் குழுவைச் சேர்ந்த திரு. பீற்றர் விங்கலரும்கூடச் சென்றார். (அ-3)

கூட்டம்

யாழ்.பல்கலைக்கழகமாணவர் ஒன்றிய நிறைவேற்று அங்கத்தவர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 9. 30 மணியளவில் நடைபெற உள்ளது. (ஒ)

மெழுகுதிரி வெளிச்சத்தில் அகதிப் பெண் பிரசவம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

மெழுகுதிரி வெளிச்சத்தில் திருகோணமலையில் இருந்து அகதியாக வந்த பெண் ஆண் மகனைப் பெற்றெடுத்தார்.

அளம்பில் தேவாலயத்தில் அகதியாக தங்கியிருந்த திருகோணமலையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளுக்குத் தாயான பெண் பிரசவ வேதனை ஏற்படவே இரவு 11 மணியளவில் அளம்பில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

அங்கு வெளிச்சம் இல்லை; உபகரண வசதிகள் இல்லை; செஞ்சிலுவைச்சங்க வைத்தியர்களின் சாதுரியத்தால் ''மெழுகுதிரி'' வெளிச்சத்தில் ஆண் மகவை பிரசவித்தார்.

இவர் தற்சமயம் அளம்பில் தேவாலயத்தில் தங்கியுள்ளார். (இ-3)

செஞ்சிலுவைச் சங்க அதிகாரி வைத்தியசாலைக்கு விஜயம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவைச் சேர்ந்த நிவாரண வைத்தியத் துறை அதிகாரி செல்வி. எலிசபெத் விஜயம் செய்தார்.

சகல பகுதிகளுக்கும் சென்ற அவர் நோயாளர்களுக்கு ஆறுதல் கூறினார். அங்குள்ள குறைபாடுகளையும் கேட்டறிந்தார். (இ-3)

யாழ். மாவட்டத்தில்

30 ஆயிரம் குடும்பங்களுக்கு ஒரு வார நிவாரண உணவு

யாழ்ப்பாணம், ஜூலை 1

இடம்பெயர்ந்தோருக்கான ஒருவார உணவு நிவாரணம் யாழ். மாவட்டத்தில் 30 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மீதியானவர்களுக்கும் வழங்கப்பட்ட பின்பு 2 ஆம் வாரத்துக்கான நிவாரணம் வழங்கப்படும்.

யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் இதனைத் தெரிவித்தார்.

நேற்றுக்காலை செயலகத்தில் நடைபெற்ற நிவாரண வேலைகள் தொடர்பான கூட்டத்தின் பின் அரச அதிபர் இதனைத் தெரிவித்தார்.

ஈரோஸ் உறுப்பினர்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயம் பற்றி தமிழக அரசுக்கு முறையிடப்பட்டதை அடுத்து, ஈரோஸ்உறுப்பினர்கள் மூவரும் சென்னை மத்திய சிறையிலிருந்து தைதாப்பேட்டை சிறைக்கு மாற்றப்பட்டனர். என்றும் அறியவந்தது.

கடந்த 19 ஆம் திகதி சென்னை கோடம்பாக்கத்தில் வைத்து ஈ.பி. ஆர். எல். எவ் வின் தலைவர்கள் கூட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்தே இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டிருந்தனர். (உ-9)

தேவை

புளொக் தயாரிப்பதற்கான கமரா

புளொக் தயாரிப்பதற்கு உபயோகிக்கப்படும் கமரா தேவை. விற்பனைக்கு வைத்திருப்போர் உடன் தொடர்பு கொள்ளவும்.

கே. எஸ். ஆர். போட்டோ,
12 'A', கந்தபுராண வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers of Tamil Eelam

இனத்தைக் காக்கும் களத்தில் குதிக்க அனைவரும் அணி திரளுங்கள்!

தமிழீழ மக்களே!

தமிழீழ விடுதலைக்காக எமது தலைவரால் நான்கைந்து பேருடன் தொடங்கப்பட்ட எமது இயக்கம் இன்று மாபெரும் விடுதலை இயக்கமாக, **தமிழ்பேசும் மக்களின் தேசிய இராணுவமாக** வளர்ச்சியடைந்து விட்டது. இந்த வளர்ச்சிக்கு பல்வேறு இன்னல்கள் இடையூறுகளுக்கிடையே உள்ளத்து உறுதியுடன் இயக்க வீரர்களும், வீராங்கனைகளும் ஆற்றிவந்த மனமுவந்த அயராத உழைப்பும், உயிரைத் துச்சமென மதித்து களப்பலியாகிய 1,500க்கும் மேற்பட்ட இயக்க வீரர்களின் உயிர்த் தியாகமுமே காரணமாகும். தமிழ்பேசும் மக்கள் வழங்கிவந்த ஆதரவும், ஒத்துழைப்பும் எமது வளர்ச்சிக்கு பக்கபலமாக இருந்தன.

எந்தவொரு வெளிச்சக்திகளின் உதவியுமின்றி தமிழ்பேசும் மக்களின் பேராதரவுடன் கட்டியெழுப்பப்பட்டுள்ள எமது தேசிய இராணுவத்தின்மீது (விடுதலைப்புலிகள் மீது) இன்று, சிறிலங்கா அரசு பகிரங்கமாகவே யுத்தப்பிரகடனம் செய்து முப்படைகளையும் ஏவி தாக்குதல்களை நடாத்தி வருகின்றது.

சிறிலங்கா அரசு தொடுத்திருக்கும் யுத்தம் விடுதலைப்புலிகள் மீதானதல்ல; தமிழ்பேசும் மக்கள் மீதான தாக்குதல்தான் என்பது வெளிப்படையானதே.

சிறிலங்காப் படையினரின் இத்தாக்குதலில் பெருந்தொகையாகக் கொல்லப்பட்டிருப்பது விடுதலைப் புலிகளல்ல; தமிழ்பேசும் மக்களே!

வீடுகள், கடைகள் மற்றும் சொத்துக்களை இழந்து அகதிகளாக்கப்பட்டிருப்பது தமிழ்பேசும் மக்களே!

பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாகியிருப்பது தமிழ்பேசும் மக்களே!

பெருந்தொகையில் காயமடைந்து அவதியுற்றுக் கொண்டிருப்பது தமிழ்பேசும் மக்களே!

சிங்களப் படையினரால் மனித கவசமாக்கப்பட்டு வருவது தமிழ்பேசும் மக்களே!

தமிழீழ விடுதலை ஒன்றுதான் தமிழ்பேசும் மக்களுக்கு உண்மையான, நிரந்தரமான பாதுகாப்பு என்பது இதனால் உறுதியாகிவிட்டது.

தமிழீழ விடுதலைக்கான தேசிய விடுதலைப் போராட்டத்தை நோக்கி நாம் தள்ளப்பட்டு விட்டோம். தமிழ்பேசும் மக்கள் ஒவ்வொருவரும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகி விட்டது.

தமிழ் இளைஞர்களே! பெண்களே! தமிழீழத்தின் தேசிய இராணுவமான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உடனடியாக உங்களை இணைத்துக்கொள்ளுங்கள்!

இனத்தைக் காக்கும் களத்தில் குதிக்க அனைவரும் அணிதிரளுங்கள்!

— மத்திய குழு, தமிழீழ விடுதலைப் புலிகள்

தமிழீழ விடுதலைப் புலிகள் செய்தி வெளியீட்டுப் பிரிவு, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org